# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2016

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 4

சுட்டெண்:

நேரம்: 120 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 05 | | | |
| 3 | 05 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 10 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. பரத நாட்டிய நிகழ்ச்சிகளில் இடம்பெறும் இசைக் கருவிகளில் ஒன்று ______________ .

(மேளம், தப்பட்டை, தண்ணுமை)

2. சிங்கமும் முயலும் என்ற பாடத்தில் சிங்கம் ______________ குதித்து இறந்தது.

(குளத்தில், கிணற்றில், ஆற்றில்)

3. நல்ல நண்பர்களை எமக்குக் ______________ விளைகிற காலத்தில் அறியலாம்.

(கேடு, இன்பம், மகிழ்ச்சி)

4. கண்ணகிக்குச் சிலை அமைக்க கனகனையும் விசயனையும் கல்லைச் சுமந்து வரச் செய்த மன்னன் ______________ .

(சேரன்செங்குட்டுவன், எல்லாளன், இராவணன்)

5. இங்கே பல பொம்மைகள் உள்ளன. ______________ ஒன்றை நீ தேர்ந்தெடு.

(அவற்றுள், இவற்றுள், ஒவ்வொன்றும்)

6. குறள்:-

ஆங்குஅமைவு எய்தியக் ______________ பயம்இன்றே
வேந்துஅமைவு இல்லாத நாடு

(மண்ணும், கண்ணும், விண்ணும்)

7. மரபு விளையாட்டுகளில் ஒன்று ______________ .

(காற்பந்து, கூடைப்பந்து, சிலம்பம்)

8. தமிழில் உள்ள முதன்மையான இலக்கண நூல் __________________ .

(தொல்காப்பியம், திருக்குறள், நல்வழி)

9. __________________ முரசு முழங்க,அரசன் படைநடத்திச் சென்றான்.

(கொடை, போர், மண)

10. இராவணனின் சிறப்புகள் பற்றி __________________ கூறுகிறது.

(இராமாயணம், சிலப்பதிகாரம், இராவணகாவியம்)

11. **நொடி:-**

அந்தரத்தில் பறக்கும் பறவை அல்ல.அழகான வால் உண்டு அணிலும் அல்ல. அது __________________ .

(சட்டை, பட்டம், அஞ்சல்)

12. ஐரோப்பியருக்கு அறுவடை விழாபோல் தமிழருக்குரிய விழா __________________ .

(ஆடிப்பிறப்பு, பொங்கல், நவராத்திரி)

13. இல்மனைட் (அறல்) எனப்படும் கனிப்பொருள் __________________ காணப்படுகிறது.

(புல்மோட்டையில், கரிமலையூற்றில், கன்னியாயில்)

14. __________________ யானையைக் கண்டு குழந்தை அழுகிறது.

(உறுமுகிற, கத்துகிற, பிளிறுகிற)

15. உணவு பழுதடையாமல் இருப்பதற்காகச் சேர்க்கப்படும் கமழ்வுப்பொருள் __________________ .

(மஞ்சள், கடுகு, மிளகு)

16. பழமொழி:- எலி வளையானாலும் ______________ வேண்டும்.

(தனிவழை, தனிவலை, தனிவளை)

17. மன்னனாய் இருந்தும் ஈசன் எனப் போற்றப்பட்டவன் ______________ .

(எல்லாளன், அதியமான், இராவணன்)

18. தரைவாழ் உயிரினங்களில் ஒன்று ______________ .

(இறால், எலி, சுறா)

19. காவலர் கள்வனை ______________ விரட்டினர்.

(ஓடஓட, தடதட, மடமட)

20. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் பாடப்பட்ட கோயில் ______________ .

(நகுலேச்சுரம், கோணேச்சுரம், முன்னேச்சுரம்)

21. ______________ மாந்தன் குமுகத்தில் மதிப்புப் பெறுவான்.

(கெட்ட, கல்லாத, கற்ற)

22. வயிற்றுப்புழு நோய்க்கு மருந்தாகப் பயன்படும் பூ ______________ .

(முருக்கம்பூ, வேப்பம்பூ, மாதுளம்பூ)

23. தோற்கருவி என்பதைப் பிரித்தால் ______________ .

(தோற்+கருவி, தோல்+கருவி, தோற்க்+கருவி)

24. அறுவடை என்பது ______________ .

(கதிர்முற்றுதல், கதிர்அறுத்தல், கதிர்வளர்தல்)

25. மாணவர்கள்________________ வணங்கினர்.

(ஆசிரியருக்கு, ஆசிரியரை, ஆசிரியரால்)

26. செடி, கொடி, மரங்கள் என்பன ________________ .

(வயல்கள், தொழில்கள், நிலைத்திணைகள்)

27. நீ ________________ விளையாடச் சென்றாய்?

(எப்போது, அப்போது, இப்போது)

28. **அடக்கம் உடையார் அறிவிலர்......** எனத்தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல்________________ .

(மூதுரை, நல்வழி, நாலடியார்)

29. நான் நடித்தேன் . நாங்கள் ________________ .

(நடித்தார்கள், நடித்தோம், நடிப்பார்கள்)

30. கிளித்தட்டு விளையாட்டில் தட்டு மறிப்பவர்________________ க் கோட்டில் நிற்பர் .

(குறுக்கு, எல்லை, நடு)

| புள்ளிகள் 30 |
|---|

**2) கீழே தரப்பட்டுள்ள சொல்லியங்களில் கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.**

| | | |
|---|---|---|
| கிடுகிடு | மதமத | இன்பதுன்பம் |
| குறுகுறு | நினைக்கநினைக்க | |

1. ____________________ இரண்டும் வாழ்வில் வருவது இயல்பு.

2. நிலநடுக்கத்தினால் கட்டிடங்கள் ____________________ என ஆடின.

3. நாடகத்தில் வந்த நகைச்சுவையை ____________________ ச் சிரிப்பு வருகிறது.

4. வாழைக் கன்று ____________________ எனச் செழித்து வளர்ந்திருக்கிறது.

5. குழந்தை ____________________ என நடந்து வந்தது.

புள்ளிகள் 05

## 3) மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி; கருத்துள்ள சொல்லியமாக்குக.

1. பல்வேறு / இசைக்கருவிகளைப் / பயன்படுத்தினர் / தமிழர்

______________________________________________ .

2. தாழ்த்திச் / சென்றது / காலம் / சிங்கத்திடம் / முயல்

______________________________________________ .

3. எழுதுகின்றனர் / தமிழ்மொழித் / மாணவர்கள் / தேர்வு

______________________________________________ .

4. ஒரு / கிளித்தட்டு / விறுவிறுப்பான / விளையாட்டு

______________________________________________ .

5. பேச / இனிய / நாங்கள் / வேண்டும் / சொற்களைப்

______________________________________________ .

| புள்ளிகள் 05 |
|---|

4) **கீறிட்ட இடங்களில் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி; சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. குழந்தை தாலாட்டுப் பாடலைக் கேட்டு ______________________ .

2. ஆடி முதலாம் நாள் ஆடிப்பிறப்பைக் ______________________ .

3. நாங்கள் நாளும் பழங்கள் உண்ண ______________________ .

4. எல்லாளனால் இரணைமடுக்குளம் ______________________ .

5. நாளை நடக்க இருக்கும் கலைவிழாவில் நான் நடனம் ______________________ .

புள்ளிகள் 10

**5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| போற்றுவர் | விருந்தோம்பி | கைகூப்பி |
| இன்சொல் | பண்பாட்டை | |

தமிழர் மிகப் பழங்காலத்திலிருந்தே தமது ______________________ ப் பேணி வாழ்வர்.அவர்கள் தம்மை நாடி வருவோரை வரவேற்று ______________________ மகிழ்வர். விருந்தோம்புவது தமிழரது தலையாய பண்பாடாகும். களைத்து வந்தவர் புதியவராக இருந்தாலும் ______________________ கூறி வரவேற்று விருந்து அளிப்பர். ஒருவரை ஒருவர் காணும் போது ______________________ வணக்கம் கூறுவது தமிழர் மரபு. தமிழர் ஆசிரியரை உயர்வாக மதிப்பர். பெற்றோரைத் தெய்வம் எனப் ______________________. இப் பண்புகள் இன்றும் உலகெங்கும் வாழும் தமிழர்களிடையே பேணப்பட்டு வருகின்றன.

புள்ளிகள் 10

## 6) கீழேயுள்ள பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

காடுகளை நாம் பாதுகாக்க வேண்டும். காடுகள் சூழலைப் பாதுகாக்கின்றன. நாம் காடுகளில் இருந்து தேன், பழங்கள், விறகு, வெட்டுமரங்கள் போன்ற பொருட்களைப் பெற்றுக்கொள்கின்றோம். காடுகளில் சிங்கம், புலி, யானை போன்ற காட்டு விலங்குகளும் மயில், கிளி, செண்பகம், போன்ற பறவைகளும் வாழ்கின்றன. எமது தாய் நாடான தமிழீழத்தில் முல்லைத்தீவு மாவட்டம் அதிக காட்டு வளத்தினைக் கொண்டுள்ளது. இக் காடுகள் அழிக்கப்படுவதனால் நாம் பல இடர்களை எதிர்நோக்கி வருகின்றோம்.

1. நாம் எதனைப் பாதுகாக்க வேண்டும்?

________________________________________

________________________________________

2. காடுகள் எதனைப் பாதுகாக்கின்றன?

________________________________________

________________________________________

3. காடுகளில் இருந்து நாம் பெற்றுக்கொள்கின்ற பொருட்கள் எவை?

________________________________________

________________________________________

4. காடுகளில் வாழ்கின்ற விலங்குகள் எவை?

________________________________________

________________________________________

5. அதிக காட்டு வளத்தினைக் கொண்டுள்ள மாவட்டம் எது?

________________________________________

________________________________________

புள்ளிகள் 10

## 7) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. கூலங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

___

___

2. எமக்கு உடல்நலத்தையும் உளமகிழ்வையும் தருவன எவை?

___

___

3. திருகோணமலைக் கடலில் கலக்கின்ற ஆறு எது?

___

___

4. சிறுவர்களுக்கு ஆடிப்பாட அரங்கமாக அமையும் மரம் எது?

___

___

5. முன்னொரு காலத்தில் தமிழகம் முழுவதையும் ஆண்ட மன்னன் யார்?

___

___

புள்ளிகள் 10

**8) கீழே தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிட மொழியில் எழுதுக.**

1. மாம்பழம் - ______________________

2. நூலகம் - ______________________


3. கப்பல் - ______________________

4. ஆசிரியர் - ______________________

5. குடை - ______________________

புள்ளிகள் 05

9) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதுக.




புள்ளிகள் 15